

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.11.2025) தலைமைச் செயலகத்தில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்திலுள்ள திருமுட்டம் வருவாய் வட்டத்தைச் சார்ந்த 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து, அப்பகுதி உழவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட உத்தரவிட்டமைக்காக வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முன்னிலையில் காட்டுமன்னார்கோயில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் மற்றும் அப்பகுதி உழவர் பெருமக்கள் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு, தொன்மையான 9 பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை பழுதுபார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் அரசு மானியத்திற்கான முதல் தவணை தொகையாக 4.45 கோடி ரூபாய்க்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எஸ்.எம். நாசர், சிவ.வீ.மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசுச் செயலாளர் எ.சரவணவேல்ராஜ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் திருமதி வ.கலையரசி, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் முனைவர் சீ.சுரேஷ்குமார், சிறுபான்மையினர் நல ஆணையர் திருமதி மு.ஆசியா மரியம், தமிழ்நாடு வக்பு வாரிய தலைமை செயல் அலுவலர் அப்தாப் ரசூல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காட்டுமன்னார்கோயில் – திருமுட்டம் வருவாய் வட்டம் – 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை

# காவிரி டெல்டா பகுதியாக அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## அப்பகுதி விவசாயப் பெருமக்கள் தெரிவித்தனர்!

சென்னை, நவ. 29 -

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.11.2025) தலைமைச் செயலகத்தில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்திலுள்ள திருமுட்டம் வருவாய் வட்டத்தைச் சார்ந்த 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து அப்பகுதி உழவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட உத்தரவிட்டமைக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் காட்டுமன்னார்கோயில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் மற்றும் அப்பகுதி உழவர் பெருமக்கள் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.**

தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைக்கென ஐந்து தனி நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட்டு, பல்வேறு உழவர் நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன.

மேலும், தமிழ்நாட்டில் பெரும்பான்மை மக்களுக்கு வாழ்வாதாரத் தொழிலாக உள்ள வேளாண்மையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நலனை மேம்படுத்திடும் நோக்கத்தில், 2025 - 26ஆம் ஆண்டிலும் பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், 2025 குறுவைப் பருவத்திற்கு குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டதுடன், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித்திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம், பயிர்க்காப்பீடு, இலவச வேளாண் மின் இணைப்புகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் சேமிப்பு வளாகங்கள் அமைத்தல், நெல்லுக்கான ஊக்கத் தொகை, மின்னணு வேளாண் சந்தைகள், இவாடகை மையங்கள் மூலம் வேளாண் இயந்திரங்களை எளிதில் வாடகைக்குப் பெறும் திட்டம், “சி” மற்றும் “டி” வாய்க்கால்கள் தூர் வாருதல், மின்மோட்டார் பம்புசெட்டுகள், உழவர் சந்தைகள், வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டும் அலகுகள் அமைக்கும் சிறப்புத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்திலிருந்து புதிதாக பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட திருமுட்டம் வட்டத்திலுள்ள 38 வருவாய் கிராமங்களும் காவிரி டெல்டா பாசனப்பகுதியாக அறிவிக்கப்பட வேண்டுமென்பது அப்பகுதி விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வந்தது. இதனை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடலூர் மாவட்டத்தில் 15.07.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் ”காட்டுமன்னார் கோயில் வட்டத்திலிருந்து புதிதாக பிரிக்கப்பட்டுள்ள ஸ்ரீமுஷ்ணம் வட்டத்திற்கும், காவிரி டெல்டா பகுதிக்காக செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் பயன்கள் கிடைக்கும் வகையில், ஸ்ரீமுஷ்ணம் வட்டம் காவிரி டெல்டா பகுதியாக அறிவிக்கப்படும்” என்று அறிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து காட்டுமன்னார்கோயில் வட்டத்திலுள்ள திருமுட்டம் வருவாய் வட்டத்தைச் சார்ந்த 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து 21.11.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இதன்மூலம் காவிரி பாசனப் பரப்பிற்கு அளிக்கப்படும் குறுவை சிறப்புத்திட்டம் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்கள் அனைத்தும் அப்பகுதி கடைக்கோடி விவசாயிக்கும் கிடைக்கும்.

ஏற்கனவே, கடலூர் மாவட்டத்தின் காட்டுமன்னார்கோயில், மேல் புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப் பேட்டை மற்றும் குமராட்சி வட்டாரங்கள் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டம், 2020இன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக காவிரி டெல்டா பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள திருமுட்டம் வட்டத்திலுள்ள 38 வருவாய் கிராமங்களையும் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம், வேளாண் நிலங்கள் பாதுகாக்கப்படுவதுடன், நிலையான வேளாண் மேம்பாட்டிற்காக வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களும் மேம்படுத்தப்படும்.

### பள்ளிவாசல்கள் – தர்காக்களை புனரமைக்க ரூ.4,45 கோடிக்கு காசோலை! 50 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கல்!

# ரூ.10.79 கோடியில் கட்டிடங்கள் திறப்பு! ரூ.38.85 கோடியில் புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, நவ. 29 -

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 10 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, 38 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநீதி கல்லூரி மாணவர் மற்றும் மாணவிகளுக்கான விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.**

மேலும், கருணை அடிப்படையில் 50 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு தொன்மையான 9 பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை பழுதுபார்பதற்காகவும் புனரமைப்பதற்காகவும் அரசு மானியத்திற்கான முதல் தவணை தொகையாக 4.45 கோடி ரூபாய்க்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு வழங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தையும், 1989ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தையும், 2007 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககத்தையும் ஏற்படுத்தினார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம்மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் சமூக நீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

**திறந்து வைக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்!**

கன்னியாகுமரி மாவட்டம், வட்டவிளையில் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கூடம் மற்றும் கோணம் பகுதியில் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அரசு தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் கட்டப்பட்டுள்ள திறன்பயிற்சி நிலையக் கட்டடம்;

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில், 6 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 10 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்!**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சேதுராப்பட்டியில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 8 கோடியே 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், கீழக் குயில்குடியில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 4 கோடியே 46 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், நாமக்கல்லில் 150 மாணவியர் தங்கும் வசதியுடன், 9 கோடியே 95 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ள 3 சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடங்கள்;

**கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியத்தில் 100 மாணவர்கள்!**

தங்கும் வசதியுடன், 7 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநீதி கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், கீழக்கணவாயில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநீதி தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

நாகப்பட்டினத்தில் 50 மாணவியர் தங்கும் வசதியுடன், 2 கோடியே 26 இலட்சத்து 51ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதிக்கான கூடுதல் கட்டடம்;

என மொத்தம் 38 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநீதி கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கான விடுதிக் கட்டடங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**தமிழ்நாடு வக்பு வாரியத்தின் மூலம் தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை பழுது பார்ப்பதற்காக மானியம்!**

தமிழ்நாடு அரசு 2022-ஆம் ஆண்டு முதல் தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் பழுதுபார்ப்பதற்கும், புனரமைப்பதற்கும் மானியம் வழங்கி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, 2025 2026ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு பெரிய பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ், தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை பழுதுபார்பதற்காகவும் புனரமைப்பதற்காகவும் அரசு மானியமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் 9 பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு மானியத்தில் முதல் தவணையாக 4.45 கோடி ரூபாய்க்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.

**கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்!**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் பணிபுரிந்து பணியின்போது இயற்கை எய்திய பணியாளர்களின் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் விடுதி சமையலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசுச் செயலாளர் எ. சரவணவேல்ராஜ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் திருமதி. வ.கலையரசி, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் முனைவர் சீ.சுரேஷ்குமார், சிறுபான்மையினர் நல ஆணையர் திருமதி மு.ஆசியா மரியம், தமிழ்நாடு வக்பு வாரிய தலைமை செயல் அலுவலர் அப்தாப் ரசூல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திறம்பட செயல்பட்ட நிறுவனங்களுக்கு – 2025-ஆம் ஆண்டிற்கான

# குழந்தைகள் நலன் சேவை விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ. 29 -

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 2025ஆம் ஆண்டிற்கான “குழந்தைகள் நலன் சேவை விருதுகளை” தஞ்சாவூர், அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசினர் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி புனித மரியன்னை கருணை இல்லம், சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம், இராமநாதபுரம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றிற்கு வழங்கி, விருதுடன் பரிசுத் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி சிறப்பித்தார்கள்.**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்ககத்தில், குழந்தைகளின் நலனை பேணிக் காக்க திறம்பட செயல்பட்ட நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும், “குழந்தைகள் நலன் சேவை விருதுகள்” அரசு குழந்தைகள் இல்லங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லங்கள், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக் கான இல்லங்கள் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள் ஆகிய 4 பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு பரிசுத் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் அவர்கள் 2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மானிய கோரிக்கையின் போது அறிவித்தார்கள்.

அதன்படி, முதலமைச்சர் அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்ககத்தின் கீழ் செயல்படும் நிறுவனங்கள்/அலகுகளை அங்கீகரிப்பதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும், 2025ஆம் ஆண்டிற்கான “குழந்தைகள் நலன் சேவை விருதுகளை” அரசு குழந்தைகள் இல்லங்கள் என்ற பிரிவில் தஞ்சாவூர், அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லங்கள் என்ற பிரிவில் தூத்துக்குடி புனித மரியன்னை கருணை இல்லத்திற்கும், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள் என்ற பிரிவில் சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கும் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு என்ற பிரிவில் இராமநாதபுரம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கும் விருதுகளை வழங்கி, விருதுடன் பரிசுத் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளீதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இன்று

# கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், இன்று (29.11.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், ‘முரசொலி மாறன் வளாகத்தில்’ உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
நாள்: 27.11.2025

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.